DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 55 /2024**

Deposition of Witness: PW2.

| | | | |
|---|---|---|---|
| Name | பாலசுப்பிரமணி | Father Name – | மல்லையசாமி |
| Age | 62 | Village – | பண்ணைப்புரம் |
| | | Taluk – | உத்தமபாளையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.06.2026.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.**

1. நான் பண்ணைப்புரம் பேரூராட்சி அலுவலகத்தில் வேலை பார்த்து வந்தேன் என்றால் சரிதான். நான் பணிநிரந்தரம் செய்யப்பட்ட பணியில் தான் வேலை செய்தேன் என்றால் சரிதான். என்னை தவிர மற்ற வாதிகளும் பண்ணைப்புரம் பேரூராட்சி அலுவலகத்தில் பணிநிரந்தரம் செய்யப்பட்ட பணியில் தான் வேலை செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். 5ம் வாதி முனியம்மாளின் கணவர் முருகேசனும் பண்ணைப்புரம் பேரூராட்சி அலுவலகத்தில் வேலை பார்த்து தற்போது இறந்துவிட்டார் என்றால் சரிதான். நானும் மற்ற வாதிகளும் 1ம் பிரதிவாதி அலுவலகத்தில் உறுப்பினர்களாக இருக்கின்றோம் என்றால் சரிதான். 2. எனது சங்க உறுப்பினர் எண் என்ன என்றால் தற்போது நியாபகம் இல்லை. நான் 1ம் பிரதிவாதி சங்கத்தில் எவ்வளவு கடன் வாங்கினேன் என்றால் ரூ.7,00,000 கடன் வாங்கினேன், அதில் ரூ.6,30,000 த்தை மட்டும் என்னிடம் கொடுத்தார்கள், ரூ.70,000 த்தை 1ம் பிரதிவாதி சங்கத்தில் வைப்பீடு செய்தார்கள். மேற்படி ரூ.70,000 வைப்பீடு செய்ததில் இருந்து எனக்கு வருடா வருடம் Dividend கொடுத்து வந்தார்கள் என்றால் ஒரு முறை மட்டும் கொடுத்தார்கள். நான் செலுத்த வேண்டிய மாத தவணைகளை எங்களது செயல் அலுவலர் என்னுடைய சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்து 1ம் பிரதிவாதி அலுவலகத்தில் செலுத்தி வந்தார்கள் என்றால் சரிதான்.

3. எனக்கு மாத மாதம் சம்பள பட்டியல் தருவார்களா என்றால் சம்பளப்பட்டியல் தரமாட்டார்கள், Acquitance Register ல் கையொப்பம் செய்யும்போது பார்ப்போம். மேற்படி பதிவேட்டில் எனதுசம்பளத்தில் இருந்து எவ்வளவு தொகை பிடிக்கப்பட்டுள்ளது என்று தெரியவரும் என்றால் சரிதான். நானும் மற்ற வாதிகளும் 06.09.2018 ம்தேதி 1ம் பிரதிவாதி சங்கத்தில் இருந்து கடன் வாங்கியிருந்தோம் என்றால் சரிதான். எனக்கு சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்தது போலவே மற்ற வாதிகளுக்கும் சம்பளத்தில் இருந்து பிடித்தம்

செய்திருந்தார்கள் என்றால் சரிதான். நானோ மற்ற வாதிகளோ 1ம் பிரதிவாதி அலுவலகத்திற்கு சென்று நேரடியாக கடன் தொகையை செலுத்தவில்லை என்றால் சரிதான்.

4. நான் 1ம் பிரதிவாதி சங்கத்தில் சேர்ந்ததில் இருந்து மாதா மாதம் ரூ.1000 சந்தாவாக செலுத்தி வந்தோம் என்றால் சரிதான். மேற்படி சந்தா தொகையையும் எனது சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்வார்கள் என்றால் சரிதான். நான் எந்த மாதம் வரை மாத தவணை செலுத்தி வந்தேன் என்றால் கொரோனா காலம் கட்டம் வரை நான் செலுத்தி வந்தேன், அதன் பின்பு செலுத்தவில்லை. 2020 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2020ம்ஆண்டு நவம்பர் மாதம் வரை எங்களுடைய சம்பத்தில் இருந்து ரிசர்வ் வங்கியின் சட்ட திட்டத்தின்படி எந்த தொகையையும் பிடிமானம் செய்யவில்லை என்றால் சரிதான். 2020ம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கு பின்பு எனது மாத சம்பளத்தில் இருந்து எத்தனை முறை பிடித்தம் செய்தார்கள் என்றால் இரண்டு முறை பிடித்தம் செய்தார்கள்.

5. 2021 முதல் 2023ம் ஆண்டு வரை என்னுடைய சம்பளத்தில் இருந்து 1ம் பிரதிவாதி பிடித்தம் செய்து வந்தார் என்றும், இந்த வழக்கு தாக்கல் செய்தபின்பு தான் பிடித்தம்செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய Acquitance Register பார்வையிட்டால் எவ்வளவு பிடித்தம் செய்துள்ளார்கள் என்று தெரிந்துவிடும் என்றால் சரிதான். ரிசர்வ் வங்கியின் சட்டப்படி மார்ச் 2020 முதல் நவம்பர் 2020 வரையிலான வட்டியை மட்டும் நிறுத்தம் செய்து வைக்க முடியுமே தவிர அந்த காலத்திற்கான தவணை தொகையை செலுத்த நாங்கள் கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியால் எங்களுக்கு அபராத தொகை விதிக்க முடியாது என்றால் சரிதான், ஆனால் 1ம் பிரதிவாதி அபராத தொகை விதித்துள்ளார். ரிசர்வ் வங்கி பிறப்பித்த வழிகாட்டுதலின்படி தான் 1ம் பிரதிவாதி வட்டி விதித்துள்ளார் என்றால் சரியல்ல.

6. நான் வாங்கிய கடன் தொகையை செலுத்த தயாராக உள்ளேனா என்றால் அபராத வட்டியை தள்ளுபடி செய்யும்பட்சம் செலுத்த தயாராக உள்ளேன். 1ம் பிரதிவாதி எனது வீட்டிற்கு வந்து தொந்தரவு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் வாங்கிய கடனுக்கான Ledger என்றால் சரிதான். **மேற்படி நான் வாங்கிய கடனுக்கான Ledger பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள விபரங்களை ஒப்புக்கொள்கிறேனா என்றால் அதில் வட்டி தொகை கூடுதலாக போட்டுள்ளார்கள்.

7. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆவணம் 1ம் பிரதிவாதியால் எங்கள் பேரூராட்சி அலுவலகத்திற்கு அனுப்பட்ட மாதாந்திர கேட்பு பட்டியல் என்றால் சரிதான். வழக்கு

தாக்கல்செய்த பின்பு நாங்கள் மாதத்தவணை செலுத்த தவறியதால் அதற்கான அபராத தொகையையும் செலுத்த நாங்கள் கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் நான் வாங்கிய கடனைத்தவிர்த்து வேறு எந்த பிரச்சனையும் கிடையாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சொல்லியுள்ளவாறு 1ம்பிரதிவாதி என்னை வெளியில் வைத்து திட்டவோ துன்புறுத்தவோ செய்யவில்லை என்றால் சரிதான்.

8. வா.சா.ஆ.5 ஆவணத்தில் கண்டுள்ளபடி கடன் தொகையை செலுத்த நான் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. அபராத வட்டியோ அல்லது வேறு விதமான வட்டியோ விதிக்க 1ம் பிரதிவாதிக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. ரிசர்வ் வங்கியின் விதிமுறைப்படியும் கூட்டுறவு சங்க விதிப்படியும் தான் அபராத தொகை விதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.06.10 16:21:31 +0530

District Munsif,
Bodinayakanur.